(ஈ) தமிழ்நாடு 1972–ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 11/1972).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1972–ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்களோடு 15 உறுப்பினர்கள் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே உறுப்பினர்கள் கூடுமான வரையில் சுருக்கமாக பேச வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டுக் கான நிதி ஒதுக்கீடு மசோதா மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1972–73-ம் ஆண்டுக்கு 387 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதற்காக பொது விவாதம் 7 நாட்கள், மானியக் கோரிக்கைகளின் மீது 14 நாட்கள் இங்கு நடைபெற்றது. சாதாரணமாக இப்போது இருக்கின்ற 50 மானியக் கோரிக்கைகளுக்காக நாம் ஒதுக்கி விவாதித்த நாட்கள் 14. விவாதித்த கோரிக்கை ரூ. 397 கோடி. இந்தக் குறுகிய காலத்தில் நாம் இந்த மானியங்களைப் பற்றி இந்த மன்றத்தில் விவாதித்திருக்கிறோம். நமது கடமையை சரியாக நிறைவேற்றி இருக்கி றோமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாகத் தான் இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விருப்புகிறேன். 1967-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக் கையின் பேரில் 48 மானியக் கோரிக்கைகளுக்கு 17 நாட்கள் ஒதுக்கப்பட்டு விவாதம் நடைபெற்றது. அப்போதிருந்த விதி முறைகளின்படி விவாதம் 20 நாள் வரையில்தான் மானியக் கோரிக்கைகளுக்காக ஒதுக்கப்படமுடியும். ஆனால் இன்று இருக்கின்ற விதி முறைகளின் படி 25 நாட்கள் வரையிலும் மானியக் கோரிக்கைகளுக்காக நாம் விவாதிக்கலாம், நாள் ஒதுக்கலாம்.

ஆனால் இன்றையதினம் நாம் செய்திருக்கின்றது என்னவென்றால் கழிந்த ஆண்டுகளைவிட 25 நாட்களுக்கு பதிலாக நாம் நாட்களைக் குறை வாக ஒதுக்கியிருக்கிறோம். 1967–68-ல் வரவு செலவு திட்டத்தின் கீழ் ஒதுக்கிய தொகையைவிட ஒரு மடங்கு அதிகமாக தொகை இருந்த போதிலும் மானியங்களுக்காக ஒதுக்கப்பட்ட நாட்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இப்பொழுது முன்னைவிட ஒன்றிரண்டு மானியங்கள் கூடி யிருந்த போதிலும், 1966–67-ம் ஆண்டைவிட மூன்று நாட்கள் குறை வாகத்தான் ஒதுக்கி விவாதித்திருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய விதிமுறைகளின் படி நாம் போதுமான நாட்களை ஒதுக்க வேண்டும் என்று 153 (2)-வது விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நாம் நாட்களை ஒதுக்கி, மானியங்களைபற்றி விவாதித்திருக்கிறோமா என்றால் இல்லை. 13–3–1972-ம் நாள் விவாதத்தில் 10 மானியங்களை ஒன்றாகத் திரட்டி, 98 கோடி ரூபாய்க்கான மானியக் கோரிக்கைகளை நாம் விவாதித்திருக்கிறோம். அதே போன்று பல மானியக் கோரிக்கைகளை ஒன்றாக எடுத்துக் கொண்டு விவாதித்திருக்கிறோம். ஆக, இந்த நிலைமையில் விதிமுறைகளுக்குட் பட்ட வகையில் "பட்ஜெட் மான்யுவலில்" இருக்கின்ற ஒழுங்குகளுக்கு